Judicial Form No. 53
(See Rule 42 of CRP)
DEPOSITION OF WITNESS.
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SRIVILLIPUTTUR
CC NO.915/2025

**Depositions of PW- 1**

| | | | |
|---|---|---|---|
| Name | திரு.கண்ணன் | Occupation | சிறப்பு சார்பு ஆய்வாளர் |
| Father's name | காளியப்பன் | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age. | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 14th day of July 2026.

14.07.2026

எதிரி ஆஜர் இல்லை. மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவில்லிபுத்தூர் நகர்போக்குவரத்து காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.12.2024 ம் தேதி மாலை 16.00 மணியளவில் திருவில்லிபுத்தூர் மதுவிலக்கு தகா.1034 ரமேஷ், முநிகா2887 ரமேஷ் ஆகியோருடன் நானும் சேர்ந்து மதுவிலக்கு குற்ற தடுப்பு சம்பந்தமாக மதுவிலக்கு தளவாடங்களுடன் ரோந்து செய்து வரும் பொழுது அண்ணையன் தோப்பு பண்ணை அருகில் சந்தேகத்திற்கு இடமாக நின்று கொண்டிருந்தவரை பின்னால் கேட்டு தெரிந்து கொண்ட மம்சாபுரம் மீனாட்சி தோட்டதெருவை சேர்ந்த அய்யனார் மகன் அர்ஜுனன் வயத 59/24, என்பவர் போலீஸ் பார்ட்டியாகிய எங்களை பார்த்தவுடன் ஓடிய நபரை மடக்கி பிடித்ததில், அவர் கையில் வைத்திருந்த சுமார் 5 லிட்டர் பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் குடத்தை எங்களிடம் எடுத்துக் கொடுத்தார். அதை வாங்கி பார்த்த போது குடத்தில் 2 1/2 லிட்டர் அளவிற்கு வெண்மை திரவம் இருந்தது. அதை பற்றி அவரிடம் விசாரிக்க அதுபனங்கள் என்று சொன்னார். அதை முகர்ந்து பார்த்தபோது ஒருவித விஷ நெடியுடன் கூடிய வாடை வந்தது. அது மனித உயிருக்கு கேடுவிளைவிக்கும் விஷ பனங்கள்ளை வைத்திருந்ததற்காக அர்ஜூனன் என்பவரை 17.00 மணிக்கு கைது செய்தும் அவர் வைத்திருந்த சுமார் 5லிட்டர் பிடிக்கக்கூடிய பிளாஸ்டிக் குடத்தை

கைப்பற்றியும் அதிலிருந்த விஷ பனங்கள்ளிலிருந்து தலா 750 எம்எல் பிடிக்கக்கூடிய 2 வெள்ளை நிற பிளாஸ்டிக் கேன்களில் தலா சுமார் 500 எம்எல் வீதம் மாதிரிக்கு எடுத்து SHO சீல் வைத்து பின்னர் அவருடைய பெயர் முகவரியை அந்த பாட்டிலில் ஒட்டியும், அத்தாட்சி தயார் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியிலுளள கையெழுத்து என்னுடையதுதான். **அத்தாட்சி அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அந்த இடத்தில் வேற யாரும் இல்லாததால் அந்த அத்தாட்சியில் நாங்களே கையொப்பம் இட்டும், மீதி உள்ள பனங்கள்ளை காவல் ஆய்வாளர் உத்தரவுபடி அந்த இடத்தில் கொட்டி அழித்தும், குடத்தை உடைத்தும், பின்பு எதிரி அர்ஜுனனை மேலும் விசாரிக்க எவ்வித அச்சுறுத்தலோ ஆசை வார்த்தையோ இன்றி அவர்தானாக முன்வந்து 18.00 மணிக்கு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். **ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து மட்டும் அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் யாருககும் தெரியாமல்பனங்கள் இறங்கி அதை போதை ஏற்றுவதற்காக வெள்ளை நிற பொடியை கலந்து கேட்பவர்களுக்குஅதிக விலைக்கு விற்று வருவதாக கூறினார். பின்பு எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட விஷ பனங்கள்ளுடன் 18.30 மணிக்கு நிலையம் வந்து நிலைய குற்ற எண். 658/2024 பிரிவு 4(1)(C) 4(1–A)(II) TNP Amendment act ன்படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. முதல்தகவல் அறிக்கையின் அசலை நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பிவைத்தேன். பின்னர் மேல் விசாரணைக்காக வழக்குகோப்பை காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைத்தேன் இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>**

இவ்வழக்கு சம்பந்தமாக ரோந்து பணிக்கு திருவில்லிபுத்தூர் மதுவிலக்கு அமலாக்க பிரிவிலிருந்து தான் நாங்கள் புறப்பட்டு சென்றோம் என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து மேற்படி அண்ணையன் தோப்பு பண்ணையானது காவல் நிலையத்திலிருந்து சுமார் 7 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இடத்திற்கு என்னுடன் சேர்த்து போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்கள் 3 நபர்கள் சென்றோம். நாங்கள் எவ்வாறு மேற்படி இடத்திற்கு சென்றோம் என்பது பற்றி

குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வாழைக்குளம் கழிங்கலிலிருந்து அண்ணையன் தோப்பு பண்ணை அருகில் உள்ள பகுதிகளில் 1000 த்திற்கும் மேற்பட்ட பனைமரங்கள் உள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கின் எதிரி குறிப்பாக எந்த மரத்திலிருந்து பனங்கள் இறக்கினார் என்பது குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கின் சம்பவம் நடந்ததாக கூறப்படும் மரத்தினை குறிப்பிட்டு வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் வழக்கு விசாரணைக்கு தேவையில்லை என்பதாலும் வழக்கு சொத்தை நேரடியாக பிடித்ததாலும் எதிரி பனங்கள் என்று வாக்குமூலம் கொடுத்ததாலும் தயார் செய்யவில்லை. எதிரியிடமிருந்து பனைமரம் ஏற பயன்படுத்தும் கருவிகளான அருவாள், கால்தலை, போன்ற உபகரணங்கள் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். விஷவாடையுடன் கூடிய பனங்கள்ளை கண்டுபிடிப்பதற்காக சிறப்பு பயிற்சிகள் எதுவும் நான் படிக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி நாங்கள் கைப்பற்றியதாக கூறப்படும் குடத்தினை புகைப்படம் எடுக்கப்படவில்லை என்றால் வழக்கிற்கு தேவையில்லை என்பதால் எடுக்கவில்லை. அத்தாட்சியை நான் தான் தயார் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி அத்தாட்சியின் படிவமானது ஏற்கனவே தட்டச்சு செய்யப்பட்ட படிவம் என்றால் சரிதான். பொதுவாக அத்தாட்சியை கைப்படதான் எழுதுவோம் என்றால் சரிதான். இவ்வழக்கில் ஏற்கனவே தட்டச்சு செய்யப்பட்ட அத்தாட்சியில் தான் எழுதியுள்ளோம் என்றால் பொதுவான சங்கதிகள் மட்டும் தான் தட்டச்சு செய்யப்பட்டிருந்தது மற்ற சங்கதிகளை நான் தான் எழுதினேன். எதிரியிடம் நான் தான் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினேன் என்றால் சரிதான். அதை நான் தான் கைப்பட எழுதியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் சொத்துக்களை அழிப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால் காவல் ஆய்வாளரின் வாய்மொழி உத்தரவின் பேரில் அழித்தோம். இவ்வழக்கின் அத்தாட்சி, முதல் தகவல் அறிக்கை மற்றும் எனது BNSS பிரிவு 180(3) வாக்குமூலத்திலும் காவல் ஆய்வாளர் சொன்னதன் பேரில் மேற்படி கைப்பற்றப்பட்ட பொருட்களை அழித்தாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி அண்ணையன் தோப்பு பண்ணையில் சுமார் 100 குடும்பங்கள் வீடு அமைத்து வாழ்ந்து வருகிறார்கள். அந்த பகுதியில் 2 பெட்டிக்கடைகள் உள்ளது என்றால் சரிதான். எதிரியிடமிருந்து அவர் பனங்கள் விற்றதாக பணம் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரிதான். பதநீர் காலம் கடந்துவிட்டால் புளித்த

வாடையுடன் விஷ வாடையும் அடிக்கும் என்றால் புளித்த வாடை அடிக்கும் ஆனால் விஷ வாடை அடிக்காது. பதநீரும் பனங்கள்ளும் ஒரே மரத்திலிருந்து தான் கிடைக்கும் என்றால் சரிதான். எதிரியை கைது செய்ததாக கூறப்படும் இடத்தினை குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். மேற்படி கைது செய்ததாக கூறப்படும் இடத்தின் அருகே பாலம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி பண்ணை அருகே ஒரு கோவில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி எதிரியை கைது செய்ததாக கூறப்படும் இடமானது மம்சாபுரம் டூ செண்பகத்தோப்பு ரோட்டில் அமைந்துள்ளது என்றால் சரிதான். மேற்படி ரோடானது மக்கள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் தனிநபரிடம் கையெழுத்து பெறாமல், போலீஸ் பார்ட்டிகளாகிய நாங்களே சாட்சிகளாக கையெழுத்து செய்துள்ளோம் என்றால் தனிநபர்களிடம் சாட்சிகளாக இருக்குமாறு கேட்டோம் ஆனால் அவர்கள் முன்வரவில்லை. எதிரியை சோதனை செய்வதற்கு முன் நீதிமன்றத்திலோ அல்லது எங்களது மேல் அதிகாரிகளிடமோ எந்தவித உத்தரவும் பெறப்படவில்லை என்றால், காவல் ஆய்வாளர் கூறியதால் எதிரியை சோதனை செய்தோம். எதிரியிடம் இருந்து பனங்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடம் கைப்பற்றியதாக கூறப்படும் பனங்கள்ளை ஊற்றுவதற்கான கேன்களை நாங்கள் காவல் நிலையத்திலிருந்து கிளம்பும் போதே எடுத்து சென்றோம் என்றால் சரிதான். மேற்படி பிளாஸ்டிக் கேன்களில் வைக்கப்பட்டிருந்த அரசு சீல்களையும் காவல் நிலையத்திலிருந்தே எடுத்து சென்றுவிட்டோம் என்றால் சரிதான். காவல் ஆய்வாளர் உத்தரவின்படி மதுவிலக்கு தளவாடங்களான அரசு சீலும் எடுத்துச்சென்றோம். மாதிரிக்காக இரண்டு கேன்களில் எடுத்த பானங்கள் போக மீதமுள்ளவற்றை அழித்துவிட்டோம் என்றால் சரிதான். அதனை புகைப்படம் எடுக்கவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாக கூறப்பட்டுள்ள கேன்களுடன் சேர்த்து எதிரியை புகைப்படம் எடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி பனங்கள் கெட்டுப்போகாமல் இருப்பதற்கு உரிய நடைமுறைகளை பின்பற்றிவிட்டுதான் காவல்நிலையத்திற்கு எடுத்துவந்தோமா என்றால் எவ்வாறு எதிரியிடம் கைப்பற்றினோமோ அவ்வாறு தான் காவல்நிலையத்திற்கு எடுத்துவந்தோம். எங்களது மேல் அதிகாரிகள் கேட்டு கொண்டதற்கிணங்க மேற்படி கேண்களை உற்பத்தி செய்து எதிரி மீது பொய்யாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. தமிழ்நாடு

மதுவிலக்கு சட்டத்தின் படி மேற்படி மீதமுள்ள பனங்களை அழிப்பதற்கு எங்களுக்கு அதிகாரம் இல்லை என்றால் காவல் ஆய்வாளரின் உத்தரவின்படி அழித்தோம். உண்மையில் எதிரியிடமிருந்து குடத்தை கைப்பற்றியிருந்தால், அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்போம் என்றாலும், அவ்வாறு கைப்பற்றப்படாததால் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரி மீது புள்ளி விபரத்திற்காக இவ்வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிகளிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண்.2,
திருவில்லிப்புத்தூர்.